பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

29 07 2025 **TUESDAY** 6 45 **AM**

வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மக்களவையில் ஆபரேஷன் சிந்தூர் குறித்த விவாதத்தில் தெளிவாக கருத்துகளை எடுத்துரைத்த மத்திய அமைச்சர்கள் திரு. ஜெய்சங்கர் மற்றும் திரு. ராஜ்நாத் சிங்கிற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.
- எல்லைதாண்டிய தீவிரவாதத்தை இந்தியா ஒருபோதும் பொறுத்துக்கொள்ளாது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
- உயர் சிறப்பு முதுநிலை மருத்துவப் படிப்புகளில் காலியாக உள்ள 24 இடங்களை நிரப்புவதற்கு அனுமதி அளிக்க கோரி மத்திய சுகாதாரத்துறை அமைச்சருக்கு மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கடிதம் அனுப்பியுள்ளார்.
- 12ஆம் வகுப்பு துணைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் இந்த ஆண்டு இளநிலைப் பட்டப் படிப்பில் சேர விண்ணப்பிக்கலாம் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.
- 17 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்தப் போட்டியின் **Greco Roman** பிரிவில் இந்தியாவின் ஹர்தீப் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

நாடாளுமன்ற மக்களவையில் ஆபரேஷன் சிந்தூர் குறித்த விவாதத்தின்போது மிக தெளிவாக தங்களது கருத்துகளை எடுத்துரைத்த வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங்கிற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

தீவிரவாதத்தை ஒடுக்குவதற்காக ஆபரேஷன் சிந்தூர் மூலம் இந்தியா தொடுத்த தாக்குதல் நியாயமானது என்று உலக நாடுகள் உணர்ந்துள்ளதாக திரு. ஜெய்சங்கர் கூறியது வரவேற்கத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆபரேஷன் சிந்தூரின்போது இந்தியாவைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்புப் படையினர் நடத்திய தீரச் செயல்கள் வெற்றியை ஈட்டியுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்தக் கருத்துக்களை கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

பஹல்காம் தாக்குதலுக்கு இந்திய ராணுவம் தக்க பதிலடி கொடுத்துள்ளதாகவும், எல்லைதாண்டிய தீவிரவாதத்தை ஒருபோதும் பொறுத்துக்கொள்ள முடியாது என்பதை இது எடுத்துக்காட்டியுள்ளதாகவும் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்ற மக்களவையில் ஆபரேஷன் சிந்தூர் குறித்த விவாதத்தின்போது பேசிய அவர், இந்தியா 5 முக்கிய அம்சங்களை மேற்கொண்டதாக கூறினார்.

குறிப்பாக தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் ஒடுக்கப்படும் என்றும், எல்லைதாண்டிய தீவிரவாதத்திற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்றும் ஒருபக்கம் தீவிரவாத செயல்கள், மறுபக்கம் பேச்சுவார்த்தை என்ற நடைமுறைக்கு இடமில்லை என்றும் அவர் கூறினார்.

ஆயுதங்களை வைத்து மிரட்டல் விடுக்க முடியாது என்றும், தீவிரவாதமும், அண்டை நாட்டு உறவு முறையும் ஒன்றாக பயணிக்க முடியாது என்று அவர் குறிப்பிட்டார்.

ரத்தமும், தண்ணீரும் ஒன்றாக ஓட முடியாது என்ற அடிப்படையில் பாகிஸ்தானுடன் செய்துகொண்ட சிந்து நதிநீர் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியா – பாகிஸ்தான் இடையே ஏற்பட்ட சண்டையில் 3ஆம் தரப்பின் தலையீடு காரணமாக சண்டை நிறுத்தப்பட்டது என்று கூறுவது தவறு என்றும், அமெரிக்காவின் தலையீடு இதில் இல்லை என்றும் அவர் கூறினார்.

2008ஆம் ஆண்டு நடைபெற்ற மும்பை தாக்குதலின்போது முந்தைய அரசு எந்தவித தீவிர நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

தற்போது நாட்டைப் பாதுகாக்கும் விதத்தில் தீவிர நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருவதாகவும் திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் உயர் சிறப்பு முதுநிலை மருத்துவப் படிப்புகளில் காலியாக உள்ள 24 காலியிடங்களை நிரப்புவதற்கு மற்றும் அரசுப் பணியில் உள்ள மருத்துவர்களுக்கு நீட்டிக்கப்பட்ட சுற்றுக்கலந்தாய்வை நடத்த அனுமதிக்குமாறு மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெபி. நட்டாவிற்கு மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் வரும் ஆகஸ்ட் 5ஆம் தேதிக்குள் இந்த செயல் முறையை முடிப்பதற்கு திரு. ஜெபி. நட்டா தனிப்பட்ட முறையில் தலையிட்டு உறுதி செய்ய வேண்டும் என்று அதில் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதன் மூலம் தமிழகம் முழுவதும் உள்ள அரசு மருத்துவ நிலையங்களில் நிபுணர்களின் எண்ணிக்கை உயரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

தேசிய கல்விக் கொள்கை அறிவிக்கப்பட்டு இன்றுடன் 5 ஆண்டுகள் நிறைவடைகிறது.

இந்தியாவில் உள்ள பள்ளிகளில் கல்வி முறையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி வரும் இந்த தேசியக் கல்விக் கொள்கை எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் இருப்பதாக கல்வியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 9 லட்சம் பள்ளிகளில் பயிலும் நான்கு கோடிக்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் பயனடைந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கற்பிப்பதில் இந்தத் திட்டம் பல புதுமைகளைப் புகுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு லட்சத்திற்கும் அதிகமான ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது.

புதிய கற்றல் முறைகளை ஊக்குவிக்கும் விதத்தில் அறிவியல் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட் வருவதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மேலும் இந்திய மொழிகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் விதத்தில் கல்வி கற்பிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆணையரகத்தின் கீழ் உள்ள கல்லூரிகளில் யோகா மற்றும் இயற்கை மருத்துவப் பட்டப் படிப்புகளில் சேர்வதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் இதுகுறித்த தகவல்களை **www.tnhealth.in.gov.in** என்ற இணையதளம் மூலமாக தெரிந்துகொள்ளலாம் என்றும், விண்ணப்பப் படிவங்கள் இணைய வழியில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

சர்வதேச புலிகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

புலிகள் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், புலிகளை அழிவில் இருந்து காக்கவும் 2019ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 29ஆம் தேதி சர்வதேச புலிகள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி உலகம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

>>>>>><<<<<<

தமிழகத்தின் தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களின் ஒருசில பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான வாய்ப்பிருப்பதாக அந்த மையம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<

12ஆம் வகுப்பு துணைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் உயர்கல்விக் கனவை நனவாக்கும் விதத்தில் இந்த ஆண்டு இளநிலைப் பட்டப் படிப்பில் சேர விண்ணப்பிக்கலாம் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் வெற்றி பெறத் தவறிய மாணாக்கர்கள் தாங்கள் உயர்கல்வி வாய்ப்பை தவறவிட்டுவிடுவோம் என்று சோர்வடைந்துவிடாமல், அவர்களும் உயர்கல்வி வாய்ப்பை பெற்றிட வேண்டும் என்ற அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் **www.tngasa.in** என்ற இணையதள முகவரியில் விண்ணப்பித்து பயன்பெறுமாறு அமைச்சர் திரு. கோவி. செழியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைன் போர் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட ரஷ்ய அதிபர் புடினுக்கு இன்னும் 12 நாட்கள் மட்டுமே உள்ளன என்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் எச்சரித்துள்ளார்.

>>>>>><<<<<<

பலுசிஸ்தானில் உள்ள ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் பாகிஸ்தான் ராணுவத்தினரால் சிறை வைக்கப்பட்டுள்ளதற்கு அங்குள்ள மனித உரிமை ஆணையம் கண்டனம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. பஜன்லால் சர்மா, மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹானை புதுதில்லியில் சந்தித்துப் பேசினார். அப்போது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் மாநிலத்திற்கு 4 ஆயித்து 384 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்கு நன்றி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

நீலகிரி மாவட்டம் குன்னூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்றங்கள் குறித்து செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<<

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் காவிரிக் கரை பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதையடுத்து, காவிரிக் கரையோர மக்கள் யாரும் அப்பகுதிக்கு செல்ல வேண்டாம் என்று குமாரபாளைய வட்டாட்சியர் திரு. சிவகுமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

ராமநாதபுரம் மாவட்டத்தில் பாம்பன் அருகே ஆட்டோவும், சரக்கு வாகனமும் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் இருவர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

>>>>>><<<<<<

சென்னை பெருநகர காவல்துறை சார்பாக போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு முகாம் தியாகராயா கல்லூரியில் நடைபெற்றது.

>>>>>><<<<<<

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி அருகே திருக்கடையூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீ அமிராமி அம்மனின் ஆடிப்பூரத் திருவிழாவை முன்னிட்டு தீர்த்தவாரி நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

>>>>>><<<<<<

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து தபால் அலுவலகங்களிலும் இந்திய தபால் துறையின் மென்பொருள் மேம்படுத்தப்பட இருப்பதால், ஆகஸ்ட் 2ஆம் தேதி எந்தவித பரிவர்த்தனைகளும் நடைபெறாது என்று திண்டுக்கல் அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் திரு. பரமசிவம் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு குறித்த மூன்று நாள் விழிப்புணர்வு கருத்தரங்கை அம்மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. எம்.எஸ். பிரசாந்த் நேற்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

திருவாரூர் மாவட்டம் அருள்மிகு கமலாம்பிகை அம்மன் ஆடிப்பூர விழா நடைபெற்றது. ஒரு லட்சம் வளையல்களால் அலங்கரிக்கப்பட்ட அம்மனுக்கு தீபாராதனை நடைபெற்றது.

**>>>>>><<<<<<**

*விளையாட்டுச் செய்திகள்*

17 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்தப் போட்டியின் **Greco Roman** பிரிவில் இந்தியாவின் ஹர்தீப் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>><<<<<<**